முருகப்பெருமான் துணை

**மகான் அப்பூதியடிகள் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**19.09.2023,** செவ்வாய்கிழமை

1. ஓங்கார ஞான பிரம்மமே
ஓங்கார குடில் படைத்து வரமாக
ஓங்கார ஞானம் அருளுகின்ற
ஓங்கார ஞானியே உன்பெருமை கூறி
2. கூறியே சோபகிருது தரிவை திங்கள்
குறைவிலா உபய திகதி குசன் வாரம்
(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 02 ம் நாள், 19.09.2023, செவ்வாய்கிழமை)
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
தேசிகன் கேட்க அப்பூதியடிகள் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயிர்கொலை நீக்கி வாழும் நிலை
ஞானம்பெற முதல் வழியப்பா
நம்பகமுற மனமடக்கி மாயை கடந்து
4. கடந்து வாழ்வது மறுநிலையப்பா
கண்ணியமுற வாய்மை காத்து
இடர்தரா பிறருக்கு நம்பகமுற
எளிமைபட வாழ்வது அடுத்த நிலையப்பா
5. அப்பனே ஆசாபாசம் கடந்து
அடுத்தவன் பொன்பொருள் மேல்
தப்பான அபகரிப்பு எண்ணமின்றி
தன்னலமிலா வாழ்வு மேல்நிலை ஆகும்
6. ஆகவே பிறரின் உழைப்பை
அவமதிப்பு செய்யா ஏற்று
வகைபட அங்கீகாரம் தந்து
வாழ்த்துவதும் உயர்நிலை தானப்பா

7. தானதரும வழிகள் தனை
தக்க செயல்பாடாக மாற்றி
ஞானம்பெற பிறர் பசிபிணி
ஞாலமதில் விரட்டும் சேவை ஆற்ற
8. ஆற்றியே உலக உயிர்களை
அனைத்தையும் தன்னுயிராய் எண்ணி
ஆற்றல்பட அரங்கன் காட்டும்வழி
அறத்தின் வழி என்பதாலே
9. ஆதலால் பின்பற்றி வந்தால் போதும்
அனைவருமே மேல்நிலை கண்டு
பூதலத்தினை மாற்ற வல்ல
புதுமைப் படைகளாகத் தேறி
10. தேறியே ஞானத் தலைமையை
தேசத்தில் படைக்கும் மகாசக்தியாக
தெரிவிப்பேன் ஞானிகளாவர்
தேசிகனார் ஆசிபட உலகோர்
11. உலகோர் ஞான ஆட்சிதனை
உருவாக்கி அரங்கன் நோக்கம்
காலமதில் வெற்றிபெறச் செய்வர்
கண்டுரைத்த அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–